



# அத்தியாவசிய பொருட்களுக்கு வரி விலக்கும் வரி குறைப்பும்

# அத்தியாவசியப் பொருட்களுக்கு, வரி விலக்கும் - வரி குறைப்பும்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
**4-5-98** அன்று, சட்டப்பேரவையில், பொது விற்பனை வரி மற்றும்
மாவட்ட நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கை
மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து
ஆற்றிய உரை.

*வெளியீடு:*
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

சிறப்பு வெளியீடு எண்:11

'தமிழரசு' இலவச வெளியீடு

25-5-1998

வெளியிடுபவர்:
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை-600 002.

# அத்தியாவசியப் பொருட்களுக்கு, வரி விலக்கும் - வரி குறைப்பும்

*4-5-98 அன்று, சட்டப்பேரவையில் பொது விற்பனை வரி மற்றும் மாவட்ட நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதிலளித்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.*

**பொ**து விற்பனை வரிகள், மற்றும் நிர்வாகம் குறிப்பாக, மாவட்ட நிர்வாகம், இவற்றினைக் குறித்து இன்றைய தினம் வைக்கப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகளில், உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய, செழுமிய கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே வைக்கப்பட்டுள்ள அவர்களுடைய முறையீடுகளை எல்லாம் என்னுடைய பதில் உரையிலேயே விளக்கிக் கூறி, அவைகளை ஏற்றுக் கொண்டேன் என்று கூறுகின்ற நிலை எனக்கு இல்லை என்பதை, கோரிக்கைகளை வைத்தவர்கள் மிக நன்றாக அறிவார்கள். ஏன் என்றால், நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டு, அதிலே பல்வேறு சலுகைகள், இந்த மூன்றாவது நிதிநிலை அறிக்கை உள்பட, வணிகர்களுக்கு பொதுமக்களுக்கு ஏற்ற வகையில், அறிவிக்கப்பட்டு, வியாபாரத்திலே கொசுறு என்பார்களே, அதைப்போல, சில கொசுறு கோரிக்கைகள் இங்கே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றைப்பற்றி எல்லாம் பேசுவதற்கு முன்பு நம்முடைய நண்பர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசிய சுப்பராயன் அவர்கள் கூறிய ஒன்றை நானும் உன்னிப்பாகக் கவனித்தேன். இந்த அவையும் கவனித்தது. நாடும் கவனிக்கும். அவர்கள் சொன்னார்கள். "நீங்கள் வசூலிக்கின்ற வரி எவ்வளவோ அதற்கு ஈடான தொகை அதிகாரிகளால் கொள்ளை யடிக்கப்படுகின்றன" என்று குறிப்பிட்டார்கள்.

இதிலே சுட்டிக்காட்டி அவர்கள் பேசுகிறபோது உணவகங்களிலே வசூலிக்கப்படுகின்ற அந்த வரி பெரும்பாலும் அரசுக்குக் கிட்டாமல் அதிகாரிகளுக்கே செல்கிறது என்றும் இங்கே குறித்துச் சொன்னார்கள். நான் அதிகாரிகளுக்காக வக்காலத்து வாங்கவில்லை. வாங்குபவனும் அல்ல. ஆனால் அதே நேரத்தில் அதிகாரிகள் எல்லோருமே தவறு செய்யக் கூடியவர்கள் அல்ல. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் கூட உதகையில் அளித்த ஒரு பேட்டியை இன்று காலைப் பத்திரிகையில் பார்த்தேன். அதிலே அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். 36 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது கலைஞர் நடவடிக்கை எடுத்துவிட்ட காரணத்தால் அதிகாரிகள் எல்லாம் செயல்படவே பயப்படுகிறார்கள் என்று அதிலே அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

யாராக இருந்தாலும் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கை. ஏன் இதுவரையிலே எடுக்கவில்லை என்பது எதிர்க்கட்சியினுடைய கேள்வி. இந்தக் கொள்கைக்கும், இந்தக் கேள்விக்கும் முரண்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் பழைய காலத்து அமைச்சர்கள் மாத்திரமல்ல, தவறு செய்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல 36 பேர்கள் மீது அல்ல; ஏறத்தாழ 10 அதிகாரிகள் மீது - ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் அவர்கள் இங்கே 12 பேர் இருக்கலாம். அதிலேகூட 2, 3 பேரையும் மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய சர்க்காரிடத்திலே அனுமதி பெற்றுத்தான் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். அதிலே கூட மத்திய அரசிலே 2,3

அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இந்த 10, 12 அதிகாரிகளில், 8, 9 அதிகாரிகள் மீதுதான் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**திரு.சோ. பாலகிருஷ்ணன் :-** இந்த சுடுகாட்டு ஊழல் என்கின்ற பெயரால் நம்முடைய அரசு உயர்நீதிமன்றத்தில் மதுரையோடு நின்றுவிடக்கூடாது. எல்லா மாவட்டங்களுக்கும் சென்று அதை விசாரிக்க வேண்டுமென்று நம்முடைய அரசின் சார்பாக வழக்கறிஞர்கள் வாதாடிய பொழுது, அதன் காரணமாக உயர்நீதிமன்றத்தில் சி.பி.ஐக்கு அவர்கள் ஆணையிட்டு கிட்டத்தட்ட 30 அதிகாரிகள் மீது இன்று சி.பி.ஐ. நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் மனதிலே ஒரு குழப்பம் இருக்கிறது என்பதைத்தான் நான் பத்திரிக்கைச் செய்தியாகச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக் கெகாள்கிறேன்.

**முதலமைச்சர் கலைஞர் :-** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது போன்று அது அரசு தொடர்ந்த வழக்கல்ல; அவரே குறிப்பிட்டிருக்கிறார்கள். சி.பி.ஐ. வழக்கு என்று. எனவே சி.பி.ஐ. வழக்கில் நீதிமன்றத்தினுடைய உத்தரவை அவர்கள் நிறைவேற்றும்பொழுது அதிலே அரசு குறுக்கிட இயலாது என்பதை அவர்கள் அறிவார்கள் என்பதை நான் நம்புகிறேன். பொதுவாக 36 அதிகாரிகள் என்று சொல்லும் பொழுது ஒரு 'த்ரில்' அடேயப்பா, அவ்வளவு அதிகாரிகளா என்று எண்ணத்தோன்றும். ஆனாலும் அதிகாரிகளாக இருந்தாலும், கடந்த காலத்திலே ஆட்சி புரிந்த அமைச்சர்களாக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இந்த மாமன்றத்திலே உள்ள ஆளும் கட்சி, எதிர்க்கட்சி மற்றும் தோழமைக் கட்சியினுடைய ஏகோபித்த

எண்ணம். அதிலே மாறுபாடான கருத்து எனக்கும் இல்லை; நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருக்கும் இல்லை என்பதை நான் நன்றாக அறிவேன்; நாடும் நன்றாக உணர்ந்திருக்கிறது.

சுப்பராயன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல எல்லா அதிகாரிகளுமே தவறானவர்கள் அல்ல. அவரும் அப்படிக் குறிப்பிடவில்லை. ஆனால் இந்த வணிகவரித் துறையிலே இதுபோன்ற தவறுகள் நடப்பதற்கு ஏராளமான இடம் இருக்கிறது என்பதை அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். அதிகாரிகள் ஊழல் புரிகின்ற அதிகாரிகள், தவறு செய்கின்ற அதிகாரிகள், லஞ்சம் வாங்குகின்ற அதிகாரிகள், அப்படித்தான் செய்வோம் என்று ஓர் உறுதி எடுத்துக் கொண்டு நடப்பார்களேயானால், அவர்களைத் திருத்துவது என்பது இயலாத காரியம். வானத்தைக் கூட வில்லாக வளைத்து விடலாம். ஆனால் அப்படிப்பட்ட குணம் படைத்தவர்களை, ஊழலில் திளைப்பவர்களை, லஞ்ச லாவண்யத்திலே பிழைக்க வேண்டும். குறுக்கு வழியிலே வாழ வேண்டும் என்று எண்ணுகிறவர்களை நாம் திருத்த முடியாது.

## அலைகளை எண்ணச் சொல்லும்போது தன் 'திறமையை'க் காட்டிய அதிகாரி

உதாரணமாக ஒரு கதை கூட உண்டு. அதிகாரிகளைப் பற்றி ஏற்கெனவே ரிஜிஸ்ட்ரார் ஆக இருந்த வி.கே.சி. நடராஜன் அந்தக் கதையை சொல்லியிருக்கின்றார். அதை நான் ஒருமுறை பத்திரிகையிலே கூட குறிப்பிட்டு எழுதியிருக்கின்றேன். கடல் அலை ஆபீசர் என்று வைத்துக் கொள்ளலாம். ஒரு ஆபீசர் தொடர்ந்து கையூட்டுப் பெற்றுக்கொண்டே இருந்தார். இவரைத் திருத்துவது எப்படி ? இவர் கையூட்டுப் பெறாமல் நிறுத்துவது எப்படி

என்று யோசித்து, சில நாணயமான அதிகாரிகள் எல்லாம் கூடிப் பேசி, இவருக்கு ஒரு வேலை கொடுக்கலாம் என்று கடற்கரையிலே போய் உட்காரச் சொன்னார்கள்.

என்ன வேலை என்று கேட்டால், கடலிலே வருகின்ற அலைகளை எண்ணிக்கொண்டிரு என்று சொன்னார்கள். சொல்லி விட்டு, இவர்களுக்குள்ளே ஒரு பூரிப்பு இவனை அடக்கிவிட்டோம்; கடற்கரையிலேயே இவனை உட்கார வைத்துவிட்டோம். இவன் கடல் அலையை எண்ணிக் கொண்டிருப்பானே தவிர, இனிமேல் வாங்குகின்ற லஞ்சப் பணத்தை எண்ணுவதற்கு இவனுக்கு வாய்ப்பு இருக்காது என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அதிகாரி ஒரு நாள் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தார். அலைகளை எண்ணிக்கொண்டு. மறுநாள் சிலபேர் மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்றார்கள். கட்டு மரம் கட்டிக்கொண்டு அல்லது தோணி எடுத்துக் கொண்டு கடலுக்குச் சென்றார்கள். இவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர்களை அழைத்து, எங்கே போகிறீர்கள் என்றார்? அவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்கிறோம் என்றார்கள். நான் அலைகளை எண்ணிக் கொண்டு இருக்கிறேன். மீன் பிடிக்க, கட்டுமரத்தை உள்ளே விட்டால் அது டிஸ்டர்ப் ஆகும். அலைகள் வீணாகும் என்றார். அதற்கு அவர்கள் என்ன செய்யலாம் என்றார்கள். அதற்கு இவ்வளவு ரூபாய் கொடு, கொடுத்தால் விடுகிறேன் என்று சொன்னார். இப்படி அலைகளை எண்ணச் சொன்னால் கூட அங்கேயும் விடாமல் இந்தக் கடல் அலை ஆபீசர் தன்னுடைய திறமையைக் காட்டினார் என்று ஒரு அதிகாரியைப் பற்றி அதிகார வர்க்கத்திலே சிலபேர் திருத்த

முடியாதவர்களாகவே இருப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இந்தக் கதை சொல்லப்பட்டது.

உங்களுக்குத் தெரியும் நடராஜன் என்பவர் சொன்ன கதையது. ஒரு மூத்த அதிகாரி; கன்னியாகுமரி கடலிலே குளிக்கும்போது விபத்தின் காரணமாக இறந்து விட்ட ஒரு மூத்த அதிகாரி, நேர்மையான ஒரு அதிகாரி அவர் சொன்ன கதைதான் இது. எனவே, அதிகாரிகள், தவறு செய்கின்ற அதிகாரிகள், அதைப்போல அந்த அதிகாரிகளோடு சேர்ந்து கொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுகின்ற சிலர் இவர்களுக்கிடையிலேதான் நாம் ஆட்சியை நடத்த வேண்டியிருக்கிறது. முடிந்த வரையில் நடவடிக்கைகள் எடுக்கிறோம். நடவடிக்கை எடுத்துக்கொண்டு, அதே நேரத்தில் நல்லாட்சி நடத்த வேண்டும் என்பதற்காகவும், நாம் நம்முடைய அரிய பணியினை ஆற்றிக் கொண்டிருக்கிறோம். விற்பனை வரியைப் பொறுத்த வரையில், இந்த அரசு இந்த மூன்று நிதிநிலை அறிக்கைகளில் என்னென்ன கோரிக்கைகளை யெல்லாம் ஏற்று, விட்டுக்கொடுத்து வரிக் குறைப்பு, வரி விலக்கு இவைகளை யெல்லாம் செய்திருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். இருந்தாலும் கூட நினைவூட்டுவது என்னுடைய கடமையாகும்.

அதிலே குறிப்பாக, இங்கே நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். 17.7.96 ஆம் நாள் வெளியிடப்பட்ட அரசு அறிக்கையில், பருப்பு, பயிறு, மிளகாய் போன்ற பொருட்களுக்கு 17.7.96 முதல் விற்பனைத் தொகை ரூ.100 கோடி வரை உள்ள வணிகர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. வெளி மாநிலங்களுடைய விற்பனையைப் பொறுத்த வரை 5.8.96 முதல்

16.10.96 வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு வரி விலக்கு இல்லை என்றாலும், அந்த இடைப்பட்ட காலத்திற்கு உள் மாநிலம் மற்றும் வெளி மாநில விற்பனைகளுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.சொக்கர் அவர்களும் கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது.

17.7.96 முதல் பருப்பு, பயிறு, மிளகாய் போன்ற பொருட்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. பின்னர் அந்த வரிவிலக்கு உள் மாநில விற்பனைக்கு மாத்திரம் அல்லாமல் வெளி மாநில விற்பனைக்கும் பொருந்துமா என்ற ஐயப்பாட்டை நீக்கும் வகையில் மேற்கூறப்பட்ட வரிவிலக்கு "உள் மாநில விற்பனைக்கு" மட்டுமே என்று 5.8.96 ஆம் நாளிட்ட அரசு அறிக்கை வாயிலாக அறிவித்தது. அதன் பின்னர் வெளி மாநில விற்பனைக்கு "சி" படிவம் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் 4 விழுக்காடு வரியே விதிக்கப்படும் என்கின்ற அறிவிக்கை 13.9.96 நாளிட்ட அரசு ஆணையிலே வெளியிடப்பட்டு 16.10.96 ஆம்நாளிட்ட அரசிதழில் பிரசுரம் ஆகியுள்ளது. வெளி மாநில விற்பனைக்கு வரிவிலக்கு இல்லை என்பதை 5.8.96 ஆம் நாள் அறிவிக்கையில் தெளிவாக அறிவிக்கப்பட்டு விட்டதால் 5.8.96 முதல் வெளி மாநில விற்பனைக்கு வரி செலுத்த வேண்டும். எனினும் 17.7.96 முதல் 4.8.96 முடிய உள்ள இடைப்பட்ட காலத்திற்கு வரிவிதிக்கப்பட மாட்டாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல நம்முடைய சுப்பராயன் அவர்கள் தமிழ்நாடு ஹோட்டல்ஸ் அசோசியேஷன், சென்னை, இதன் சார்பாக அல்லது சார்பாக அல்ல அவரிடத்திலே சொல்லப்பட்ட சில கருத்துக்களின்

அடிப்படையில் அவர் சில செய்திகளை அரசுக்குச்சொல்லி அதை யோசிக்குமாறு கேட்டிருக்கிறார். அது பரிசீலிக்கப்பட்டது. அவர் சொன்னது உணவகங்களுக்கு விற்பனை வரியிலிருந்து முழு வரி விலக்கு அளிக்குமாறும் முழு வரி விலக்கு அளித்தால் அரசு நிதிநிலை பாதிக்கப்படும் எனக் கருதினால் - (எப்படி பாதிக்கப்படாமல் இருக்க முடியும்? இப்போது ரூ.15 கோடி வருகிறது; பாதிக்கப்படும் என்று கருதினால் என்பதற்கே இடம் இல்லை; பாதிக்கப்படும்) விற்பனைத் தொகை ரூ.25 லட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு விரி விதித்து - (இது ரொம்ப ஆபத்து; 25 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு வரி விதிக்கச் சொல்லி, அவர்கள் சொல்கிறார்கள். அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? நாம் 25 இலட்சத்திற்கு மேல்தான்என்று குறிப்பிட்டிருக்கிறோம்) - தற்போதுள்ள படிமுறை - ஸ்லாப்சிஸ்டம் - வீதத்தை வெகுவாக குறைக்குமாறும் கோரிக்கை விடுத்தார்கள். இது பற்றி பரிசீலித்ததில் நான் இந்த அவைக்கு ஒன்றை கூற விரும்புகிறேன்.

## தங்கராஜ் தலைமையிலான வரி சீரமைப்புக்குழு பரிந்துரை

சி.தங்கராஜ் ஐ.ஏ.எஸ் (ஓய்வு) அவர்களுடைய தலைமையிலான வரி சீரமைப்புக் குழு உணவகங்களில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்களுக்கு பின்வரும் படிமுறை - ஸ்லாப் சிஸ்டம் - சதவிகிதத்தைப் பரிந்துரைத்தது. அவர்கள் பரிந்துரைத்த வரி விகிதத்திலிருந்து நாம் எவ்வளவு குறைவாக ஆக்கியிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டத்தான் நான் சொல்கிறேன். தங்கராஜ்

தலைமையிலே இருந்த சீரமைப்புக் குழு பரிந்துரை ஆண்டு ஒன்றிற்கு 3 இலட்சம் முதல் 5 இலட்சம்வரை டர்ன் ஓவர் இருந்தால், விற்பனைத் தொகை இருந்தால், வரித்தொகை வரி விகிதம் 6,000 ரூபாய். 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை என்றால் 12,000 ரூபாய். 10 இலட்சம் முதல் 20 இலட்சம் வரை என்றால் 24,000 ரூபாய். 20 இலட்சம் முதல் 30 இலட்சம் வரை என்றால் 48,000 ரூபாய். 30 இலட்சம் முதல் 40 இலட்சம் வரை என்றால் 60,000 ரூபாய். 40 இலட்சம் முதல் 50 இலட்சம் வரை என்றால் 84,000 ரூபாய். 50 இலட்சத்திற்கு மேல் 2 விழுக்காடு.

ஆனால் இதை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொண்டிருந்தால் இந்த ஹோட்டல் அதிபர்கள்எல்லாம் என்ன ஆகியிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியாது. இருந்தாலும் நாங்களாகவே இவ்வளவு வரி அவர்களுக்குத் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்து பரிசீலித்து விற்பனைத் தொகை ரூ.25 இலட்சத்திற்கு உட்பட்டிருந்தால் வரியே இல்லை என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறோம். 25 இலட்சத்திற்கு மேல் 30 இலட்சம் வரை ஆண்டுக்கு 24,000 அவர்கள் சொன்னது 48,000. அதற்குப் பதிலாக விதித்திருப்பது 24,000. பரிந்துரை 48,000. 30 லிருந்து 40 இலட்சம் வரை 36,000 என்று ஆக்கியிருக்கிறோம். 40 இலட்சத்திலிருந்து 50 இலட்சம் வரை 48,000. 50 இலட்சத்திற்கு மிகும் விற்பனைத் தொகைக்கு 2 விழுக்காடு என்று விற்பனை வரியை நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம்.

அதுமாத்திரமல்ல, சென்ற ஆண்டுதான் உணவகங் களுக்கான வரி விகிதங்களை விற்பனை வரி சீரமைப்புக் குழுவின்

பரிந்துரையை விட மிகவும் குறைவான ஸ்லாப் - படி முறை வீதத்தை அரசு நடைமுறைப் படுத்தியிருக்கிற காரணத்தால் 25 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள உணவகங்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், உணவகங்களுக்கு மறுபடியும் வரி சீரமைப்பு செய்வதற்கு இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் மூலமாக அந்த அசோசியேஷனுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைச் சொன்னதால் அந்த அசோசியஷனுக்கும் அவருக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக யாரும் கருதத் தேவையில்லை. அவர்கள் கொடுத்த கோரிக்கையை அவர் பிரதிபலித்திருக்கிறார் அவ்வளவுதான்.

## உணவகங்களில் தற்போதுள்ள விதிகளைத் தொடர வேண்டிய நிலை

அவர் இன்னொன்று சொன்னார். உணவகங்களிலே தற்போது உள்ள இந்த படிமுறை - ஸ்லாப்விதியை நாம் தொடார வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் கூறிய குறைகளை நீக்க வேண்டுமேயானால் உணவகங்களில் சார்ட்டர்டு அக்கவுண்ட் மூலம் கணக்கை தணிக்கை செய்து அதன் அடிப்படையில் வரிக் கணக்குகளை ஏற்றுக் கொள்ளலாம். இதில் 20% கணக்குகள் மாத்திரமே கணினி முறையிலே தேர்வு செய்யப்பட்டு ஆய்வு செய்யலாம். இந்தக் கருத்தை நான் பரிசீலித்து சுப்பராயன் அவர்கள் சொன்ன அந்தக் குறைபாடு நீங்குவதற்கு இயலுமா என்பதை அதிகாரிகளோடு கலந்து பேசி பிறகு அறிவிப்பேன் என்ற உறுதியை இங்கே அளிக்கிறேன்.

1996 - 97 ஆம் ஆண்டு வழங்கிய வணிக வரி சலுகையினால் நம்முடைய முதல் நிதிநிலை அறிக்கை - நான்காவது முறையாக இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு - முதல் நிதி நிலை அறிக்கையில் வழங்கிய வணிக வரி சலுகையினால் இந்த அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.370 கோடி என்பதை மறந்துவிடக் கூடாது. ஆனால் 370 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் கூட குரோத் ரேட் ஓரளவு இருந்த காரணத்தால் ஒரு பெரிய வீழ்ச்சி இந்த விற்பனை வரி வருவாயிலே நமக்கு ஏற்பட்டு விடவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1997 - 98 ஆம் ஆண்டு வழங்கிய வணிக வரிச் சலுகையினால் அரசுக்கு 44 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டது. அதே ஆண்டில் உணவு விடுதிகளுக்கு அரசு விதித்த வணிக வரி மற்றும் பான் மசாலா, பரிசுச் சீட்டுகளுக்கு விதித்த வரி உயர்வினால் 17 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் கிட்டியது.

## வணிக வரிச் சலுகையால்<br>அரசுக்கு ரூ.40 கோடி இழப்பு

1998 - 99 நடப்பாண்டில் வழங்கிய வணிக வரிச் சலுகையினால் இந்த அரசுக்கு 40 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும். அதேசமயம் இந்தியாவில் தயாரிக்கப்படும் ஐ.எம்.எப்.எல் வெளிநாட்டு மது வகைகளுக்கு அரசு விதித்துள்ள வணிக வரி உயர்வினாலும் கூடுதல் விற்பனை வரியில்செய்த மாற்றங்களினாலும் 310 கோடி ரூபாய் அரசுக்கு வரி வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதிலே, இந்தக் கூடுதல் விற்பனை வரியிலே செய்த மாற்றம் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள் என்று கருதுகிறேன். கூடுதல்

விற்பனை வரி 100 கோடிக்கு மேல் என்று இருந்தததை 25 கோடிக்கு மேல் என்று மாற்றிய காரணத்தால் நமக்கு, அதிலே, அந்த வரியிலே அதிக வருவாய் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1998 - 99 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் வருவாய்க் கணக்கிலே செலவு 18 ஆயிரத்து 48 கோடி ரூபாய். வரவு 15 ஆயிரத்து 39 கோடி ரூபாய். இதிலே வணிக வரியின் மூலமாக 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கடந்த ஆண்டை நினைத்துக் கொண்டு, 6 ஆயிரம்கோடி ரூபாய், 6 ஆயிரத்து சொச்சம் கோடி ரூபாய் என்று எல்லாம் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். எதிர்பார்க்கப்படுவது வணிக வரியின் மூலம் 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வரிவிதிப்பு முறைகளில் சீரமைப்பு

சென்ற 2 ஆண்டுகளிலே வரி விதிப்பு முறைகளிலே பல சீரமைப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. நாணயமாக வரி செலுத்துபவர்களுக்கு நடைமுறைகளை எளிதாக்கி வரி விதிப்பு அமைப்பின் கடுமையைக் குறைத்து உள்ளது. இதன்ஒரு தொடர் நடவடிக்கையாக ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்டும் ரூபாய் 20 இலட்சத்திற்கு உட்பட்டும் மொத்த விற்பனை தொகை உடைய வியாபாரிகள் பதிவுபெற்ற பட்டயக் கணக்கர்கள் - 'சாட்டர்டு அக்கவுண்டெண்டு' தணிக்கை செய்ததன் அடிப்படையில் கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும். இதில் 10

விழுக்காடு கணக்குகள் மட்டும் துறையினரால் ஆய்வு செய்யப்படும். இதற்கான சட்ட முன்வடிவு இந்தக்கூட்டத் தொடரிலேயே அறிமுகம் செய்யப்படும். வணிகராகப் பதிவு செய்யத் தற்போதுள்ள மொத்த விற்பனைத் தொகைக்கான வரம்பு 75 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது. இதற்கான சட்ட முன்வடிவு இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

ஒரு வணிகருடைய மொத்த வியாபாரத் தொகை ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்படாமல் இருந்தால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நிபந்தனைகள் என்றால், ஆவணங்களைப் பாதுகாத்தல், ரெக்கார்டுகளை வைத்துக்கொள்ளுதல் என்ற அந்த நிபந்தனை களுக்கு உட்பட்டு அவர்களுடைய கணக்குகளை தணிக்கைக்கு உட்படுத்தாமலேயே இறுதி வரி விதிப்பு செய்திட ஆணையிடப் பட்டுள்ளது. அந்த வணிகர்கள் விரிவான கணக்கு வழக்குகளைப் பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அடிப்படைக் கணக்கு ஆவணங்களைப் பராமரித்தலே போதும் என்றும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

## விற்பனை வரிச்சட்டம் தமிழில்

விற்பனை வரிச் சட்டத்தை தமிழில் வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது தமிழ்நாடு விற்பனை வரி சட்டத்திலிருந்து அட்டவணைகளை முதலில் வெளியிடவும், பின்னர் விற்பனை வரி சட்டத்தை முழுமையாகத் தமிழில் வெளியிடவும் முடிவு செய்யப்பட்டது. அதன் முதல் கட்டமாக 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில்

உள்ள அட்டவணைகள் தமிழில் வெளியிடப்பட்டன. தற்போது விற்பனை வரிச்சட்டம் சட்டத்துறையின் மூலமாக தமிழ் ஆக்கம் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. ஆனாலும் கூட அந்த தமிழ் ஆக்கத்திலே பயன்படுத்தப்பட உள்ள சில தமிழ்ச் சொற்கள் வணிகர்களிடமும், வணிக வரித்துறையில் உள்ள அலுவலர்களிடமும் புழக்கத்தில் இல்லாத சொற்களாக இருக்கின்றன. உதாரணமாக மொழி பெயர்ப்பில் burden of proof என்பதற்கு சட்டத்துறை "நிரூபிக்கும் சுமை" என்று மொழியாக்கம் செய்திருக்கிறது. சட்டத்துறை - தமிழ்த்துறை அல்ல - சட்டத்துறை. ஆனால், அதனை "நிரூபிக்கும் பொறுப்பு" என்று எல்லோருக்கும் தெரிந்த தமிழிலே மொழி பெயர்ப்பு இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது.

## SELF-ASSESSMENT

என்பதை, சட்டத்துறை, "தன் வரிக் கணிப்பு" என்று மொழி பெயர்த்து இருக்கிறது. அதை, எல்லோருக்கும் புரியக்கூடிய அளவிற்கு "சுய வரி விதிப்பு" என்ற தமிழில் எளிமைப்படுத்தப் பட்டிருக்கிறது. "சுய" என்பது சரியான தமிழ் மொழி அல்ல என்றாலும், வடமொழி என்றாலும் கூட, சுய மரியாதையைத் தன்மானம் என்று நாம் மாற்றிக் கொண்டாலும் கூட, இங்கே சுயமரியாதை என்றாலே தமிழிலே புழக்கப்பட்டுவிட்ட வார்த்தை என்ற காரணத்தால் "சுய வரி விதிப்பு" என்று தமிழில் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

## SUBJECT TO CONDITION

என்பதைச் சட்டத் துறை, "வரையறைக்குட்பட்டு" என்று மொழியாக்கம் செய்திருக்கிறது. அது சரியான மொழி பெயர்ப்பாக

ஆக முடியாது. எனவேதான், “நிபந்தனைக்கு உட்பட்டு” என்று மொழி பெயர்த்து இருக்கின்றோம். எனவே, இந்தத் திருத்தங்கள் எல்லாம் ஆன பிறகு அது வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## காலியிடங்களை உடனே நிரப்பிட ஆணை

விற்பனை வரிச் சட்ட வழக்குகளை விரைவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். சென்னை, கோவை, மதுரை ஆகிய இடங்களில் மேல் முறையீடு தீர்ப்பாயங்களில் நீதித்துறை உறுப்பினர்கள், கூடுதல் நீதித் துறை உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிகள் நிரப்பப்படாமல் இருந்தமையால் பல வழக்குகள் விசாரிக்கப் படாமலே தேங்கிக் கிடந்தன. இதன் காரணமாக வணிகர்களுக்குப் பல இடையூறுகளும், அரசுக்கு வருவாய் தேக்கமும் ஏற்பட்டு வந்தன. இவற்றைக் களையும்பொருட்டு, காலியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்பொழுது ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது தீர்ப்பாயத்தின்துணைத் தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர் பதவிகள் நிரப்பப்பட்டு, இந்த வழக்குகளை விரைவிலே முடித்திட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இங்கே வெட்டுத் தீர்மானங்கள் தந்துள்ள உறுப்பினர்கள், அவர்கள் இங்கே பேசுகின்ற வாய்ப்பைப் பெறாவிட்டாலும் அல்லது அவர்கள் பேசாவிட்டாலும்கூட, அவைகளைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்.

## வேளாண் இடுபொருட்களுக்கு வரி குறைப்பு

பா.ம.க. - 1 கட்சி உறுப்பினர்கள் ஐ.கணேசன், ஜி.கே.மணி ஆகியோர் வேளாண் இடு பொருள்கள் மீது விற்பனை வரி விதிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். வேளாண் இடுபொருட்களான யூரியா மற்றும் அமோனியம் பாஸ்பேட் உரத்திற்கு 5.3.97 முதல் 4 சதவீதத்தி லேயிருந்து 2 சதவீதமாக வரி குறைக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே, - 97லேயே குறைச்சாச்சு. அதற்குத்தான் வெட்டுத்தீர்மானம் கொடுத்து இருக்கிறீர்கள். குறைத்தது தப்பு என்று.

மேலும், உறுப்பினர்களுடைய கருத்து ஏற்கப்பட்டு வேளாண்மைக் கான ஃபேக்டீரியா வளர்ப்பு, தழைச்சத்து, எரு மற்றும் பச்சை எரு விதைகள் போன்றவைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வேளாண்மை விளைபொருட்களுக்கு வரி ரத்து

வேளாண்மை விளை பொருட்களின் மீது விதிக்கப்படும் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று பா.ம.க உறுப்பினர் கோவிந்தன் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். பொது மக்களால் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பின்வரும் வேளாண் விளைபொருட்கள் விற்பனைக்கு 17.7.96 முதல் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவை, கடலை, துவரை, பாசிப் பயிறு அல்லது பச்சைப் பயிறு, மசூர் உளுந்து, மோத்து, கேசரி, மிளகாய், புளி, தனியா, மஞ்சள், பெருங்காயம், மிளகு மற்றும் சிகைக்காய், வெல்லம், கரும் சீரகம் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மணி அவர்கள், கயிறு உற்பத்தி செய்யும் குடிசைத் தொழிலுக்கு, கயிற்றின் விற்பனை வரி முழுமையாக நீக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். ஆனால் அப்பொழுதே, கயிற்றின் மீதான விற்பனை வரி 17.7.96 முதல் விலக்கப்பட்டுள்ளது என்பதை அவருக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## தேங்காய்க் கொப்பரைக்கு ஒரு சதவிகிதமாக வரி குறைப்பு

தேங்காய் கொப்பரைக்கு முழுமையான வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று எஸ்.என்.பாலசுப்பிரமணியன், டி.மணி, பி.ஆர். சுந்தரம் ஆகியோர் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போது மாநிலத்திற்குள் விற்பனை செய்யப்படும் தேங்காய், கொப்பரை போன்றவற்றிற்கு வரி 4 சதவீதத்திலேயிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இதுவும் போதாது என்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தேங்காய் மற்றும் கொப்பரை மீதான வரியை, தேங்காய் கொப்பரைக்கு விதிக்கப்படும் வரி 2 சதவீதத்திலேயிருந்து ஒரு சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

நிதிநிலை அறிக்கை மீது நடந்த விவாதத்திற்கு இந்தச் சட்டமன்றத்திலே பதில் கொடுத்தபோது, வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் தேங்காய் மற்றும் கொப்பரைக்கும் 1 சதவீதம் வரி அறிவிக்கப்பட்டது. எனவே, முழு வரிவிலக்கு அளிக்க இப்போது இயலாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதை ஏற்று வியாபாரிகள் மற்றும் வியாபாரிகளின் சங்கத்தினர் என்னைச் சந்தித்து மகிழ்ச்சி தெரிவித்து நன்றி கூறியிருக்கின்றார்கள்.

எனவே, அவர்களே முழு வரிவிலக்கு கோரவில்லை என்பதையும், திரு.சுந்தரம் போன்றவர்கள்தான் முழு வரிவிலக்கு கோருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவெல்லாம் ஒரு பார்லிமெண்டேரியனுக்கு அழகு, ஒன்றைச் சொன்னால் அதைவிட இன்னொன்று கேட்க வேண்டும்; அதுதான் நல்ல, சரியான பாரிலிமெண்டேரியன் என்று பொருள். சர்.ஏ.டி.பன்னீர் செல்வத்தைப் பற்றி டாக்டர் கிருஷ்ணசாமி - இந்த கிருஷ்ணசாமி அல்ல - ஏ.ஆர். முதலியாருடைய குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் கிருஷ்ணசாமி பார்லிமெண்டேரியன் என்ற ஒரு புத்தகம் எழுதினார். அதிலே அவர் குறிப்பிடுகிறார். ஏ.டி.பன்னீர் செல்வத்தைப் பார்த்து கேட்டார்களாம். 'நீங்கள் நல்ல பார்லிமெண்டேரியன் என்று சொல்கிறார்களே, திடீரென்று ஒரு நாள் ஆளும் கட்சியிலேயிருந்து ஏழைகளுக்கு எல்லாம் இலவசமாக வீடு கட்டித்தரப்படும் என்று சொன்னால் என்ன செய்வீர்கள்' என்று கேட்டார்களாம். அவர் உடனே சொன்னாராம், "அது மாத்திரம் போதாது, வீட்டுக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும் சொல்வேன்" என்று பன்னீர்செல்வம் சொன்னாராம். இதுதான் நல்ல பார்லிமெண் டேரியனுக்கு அழகு என்பார்கள். அதைப் போலவே நம்முடைய சுந்தரம் அவர்கள் இங்கே இவ்வளவு வரிவிலக்கு கொடுத்த பிறகும்கூட, நான்கை இரண்டாக்கி, இரண்டை ஒன்றாக ஆக்கிய பிறகும்கூட, அதையும் விலக்கி விடு என்று குறிப்பிடுகிறார்கள். அவர்களே மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். சுந்தரம் கவலைப்படத் தேவையில்லை என்று நான் அவருக்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

மசாலாப் பொடிக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியம் குறித்து திரு.ஞானசேகரன், திரு.எஸ்.என். பாலசுப்பிரமணியன்,

திரு.நா.பெரியசாமி, திரு.சுந்தரம், திரு.நிஜாமுதீன் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். வணிகச்சின்னம் அல்லாத மசாலாப் பொடிகள் மீதான விற்பனை வரி 16 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும், 16 - லிருந்து 2 - ஆக.

திரு.ஆர்.சொக்கர் :- வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்குப் ஏற்கெனவே 8 சதவிகிதம்தான். வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடிக்கு 16 சதவிகிதம்தான். ஆனால் இப்போது கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் அதைப் பார்த்தேன். 16-லேயிலிருந்து 2 என்று போடப்பட்டிருக்கிறது.

முதல்வர் :- என்னிடமுள்ள குறிப்பின்படி வணிகச் சின்னம் அல்லாத மசாலாப் பொடிகள் மீதான விற்பனை வரி, அது பதினாறா, பத்தா, அதுவல்ல. அது 2 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. வணிகச் சின்னம் உள்ள மசாலாப் பொடியைப் பொறுத்தவரையில் அதன் மீதுள்ள விற்பனை வரி 4 சதவீதமாகவும் 27.3.1998 முதல் வரி குறைப்பு அதற்குச் செய்யப்பட்டிருக்கிறது. 4 சதவீதமாக அது குறைக்கப்பட்டிருக்கிறது. சின்னம் அல்லாதவைகளுக்கு 2 சதவிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

வனஸ்பதி சமையல் எண்ணெய்க்கு முழு வரிவிலக்கு அளிக்க திரு.ஞானசேகரன் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர் ரொம்ப நாளாகவே வனஸ்பதியைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார். நான் அன்றைக்கே சொல்கிறபோது அதில் கொழுப்பு சக்தி ரொம்ப அதிகம் என்றும். அது வேண்டாம் என்றும் ஏற்கெனவே ஞானசேகரனுக்குச் சொன்னேன். கொழுப்புச்சக்தி இல்லையென்று சொன்னாலும்,

உருவாக்கிக் கொள்ள வேண்டாம் என்பதற்காக அது வேண்டாம் என்கிறேன்.

## சமையல் எண்ணெய்களுக்கு முழுவரி விலக்கு

சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், பாமாயில் எண்ணெய், பருத்திவிதை எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட அரிசி தவிட்டு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எல்லா சமையல் எண்ணெய்களுக்கும் **27.3.98** முதல் முழு வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது. எனவே, வனஸ்பதிக்கு வரிவிலக்கு அளிப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.கோவிந்தன் அவர்கள் தமிழகத்து மாணவர்களுக்குத் தேவையான நோட்டு புத்தகங்களுக்கு விற்பனை வரியிலேயிருந்து விலக்கு அளிக்க வேண்டி வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். தமிழகத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் தயாரிக்கப்படும், மாணவர்களுக்குத் தேவையான நோட்டு புத்தகங்களுக்கு **5.3.1997** முதல் முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இந்தச் சலுகை உள் மாநிலத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் தயாரிக்கப்பட்டு வெளி மாநிலத்திலே விற்கப்படும் மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்களுக்கும் **27.3.1998** முதல் நீட்டிக்கப்படுகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழகத்தில் லாட்டரிசீட்டு விற்பனையிலே வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டிய அவசியம் குறித்து திரு.ஐ.கணேசன், திரு.ஜி.கே.மணி, திரு.அப்துல் நாசர் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

## கவர்ச்சிக்கரமாக பரிசுச்சீட்டை உருவாக்கத் திட்டம்

தமிழகத்தில் லாட்டரி சீட்டு வணிகர்கள் செய்யும் வரி ஏய்ப்பைத் தடுக்கும்பொருட்டு, வணிகவரித் துறையில் உள்ள செயலாக்கப் பிரிவு அலுவலர்கள் அவ்வப்போது திடீர் சோதனை நடத்தி வரி ஏய்ப்பு தடுக்கப்படுகிறது. அதே நேரத்தில், வரி ஏய்ப்பு நடவடிக்கைக்களைக் குறைக்கும் பொருட்டு, லாட்டரிச்சீட்டு வணிகர்கள் இணக்க முறையில், படித்தள வீதத்தில் வரி செலுத்த சட்டத்திலும் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. 1997 - 98 ஆம் ஆண்டில் 11 கோடியே 26 இலட்சம் ரூபாய் இந்தப்பரிசுச்சீட்டு மூலமாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இந்த வருவாயை மேலும் பெருக்குவதற்கு, இந்தப் பரிசுச்சீட்டை நவீன முறையில் அறிமுகப்படுத்த வேண்டுமென்றும், இன்னும் அதற்காக பரிசுகளை அதிகப்படுத்த வேண்டுமென்றும், கவர்ச்சிகரமான அளவுக்கு இந்த பரிசுச்சீட்டுத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்றும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. 1996 - 97, 97 - 98, 98 - 99 ஆகிய இந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கையிலும் ஏராளமான வரிச்சலுகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அவைகளை யெல்லாம் நான் மீண்டும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் நினைவுபடுத்திக் கொள்ள முடியும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

தற்பொழுது வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை மாத்திரம் இங்கே நான் சொல்ல விரும்புகின்றேன். வணிகச் சின்னம் பெறாத வெண்ணெய் மற்றும் நெய் வகைகளுக்கு 4 விழுக்காடு வரியும், வணிகச் சின்னம் பெற்ற அந்த பொருட்களுக்கு 10 விழுக்காடு வரியும் உள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர். சொக்கர்,

திரு.வி.கே.லட்சுமணன், திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன், எதிர்க்கட்சித் தலைவர் திரு.சோ.பாலகிருஷ்ணன் ஆகியோர் பதப்படுத்தப்படாத வெண்ணெய்க்கு (Unpasteurised) முழு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும், தற்போது பிஸ்கட்டுகளுக்கு உள்ளது போல, வணிகம் மற்றும் வணிகக் குறிகள் (Trade and merchandised marks act) சட்டத்தின் கீழ், பதிவுபெறாத வணிகச்சின்னம் உள்ள நெய்க்கு வரியை 4 சதவிகிதமாக குறைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் திரு.நா.பெரியசாமி, திரு.பி.ஆர்.சுந்தரம், திரு.வி.கே.லட்சுமணன் ஆகியோர் இதற்காக வெட்டுத் தீர்மானமே கொடுத்திருக்கிறார்கள். அவர்களது கோரிக்கையை ஏற்று வணிகம் மற்றும் வணிகக்குறிகள் சட்டத்தின் கீழ், பதிவு பெறாத வணிகச் சின்னம் உள்ள வெண்ணெய் மற்றும் நெய்க்கு வரி தற்போதுள்ள 10 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.பி.இராசன் விருதுநகர் மாவட்டம், சத்திரப்பட்டியில் மருத்துவத் துணிகளான Gauze and Bandage துணி வகைகள் விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படுகின்றன. விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் Gauze and Bandage துணிவகைகளுக்கு தற்பொழுது 8 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது. Surgical Dressing Manufacturers Association இத்தொழிலை நம்பி சத்திரப்பட்டியில் 20 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன என்றும் Gauze and Bandage துணி வகைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள். எனவே இந்தக் கோரிக்கையை பரிசீலிக்க வேண்டுமென்று திரு.வி.பி.இராசன் கேட்டுக்

கொண்டுள்ளார். இதற்காக திரு.நா.பெரியசாமி வெட்டுத் தீர்மானமே கொடுத்துள்ளார்.

**பாண்டேஜ் துணிகளுக்கு முழு வரிவிலக்கு**

இக்கோரிக்கையைப் பரிசீலித்து, Gauze and Bandage துணிகளுக்கு ஒட்டுமொத்தமாக வரி விலக்கு அளித்தால், அரசுக்கு அதிக அளவில் வருவாய் இழப்பு ஏற்படும். ஏனென்றால், பெரிய வியாபாரிகள் அங்கே இருக்கிறார்கள் என்றாலும் சிறு உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் விற்பனைத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 25 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள விசைத்றிதறி மூலம் Gauze and Bandage துணிகளை உற்பத்தி செய்யும் சிறு உற்பத்தியாளர்களுக்கு முழு வரிவிலக்கு அளித்து ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறகு வார்னிஷ், பற்றி கே.சுப்பராயன் கேட்டது

Sivakasi Picture Varnish Coaters' Association

அவர்களது விண்ணபத்தில் தாங்கள் செய்யும்

Picture Varnish Coating தொழில் குடிசைத் தொழில் என்றும்

Picture Varnish

தயாரிப்பதற்கு மூலப்பொருட்கள் யாவும் உள் மாநிலத்தில் வரி செலுத்தி வாங்கப் படுகின்றன என்றும், எனவே ஒப்பந்தப் பணிகள் என்ற வகையில் வரி விதிப்பு சரியில்லை என்றும் கூறி வரி விலக்கு கோரியிருக்கின்றார்கள். அவர்கள் கோரிக்கையை ஏற்று வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

இயந்திரங்களினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு 8 விழுக்காடு விற்பனை வரி உள்ளது. ஆனால் கையால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு வரி விலக்கு உள்ளது. உற்பத்தியில் ஒரு சில பகுதிகளுக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மெழுகுத் தீப்பெட்டிகள் கையினால் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு சமமாகாது என்றும், அவை வரிவிலக்கு பெற தகுதி வாய்ந்தது அல்ல என்றும் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் ஆணையிட்டுள்ளார். தற்போது தென்னிந்திய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம், இத்தகைய மெழுகுத் தீப்பெட்டிகளுக்கு முன்பு இருந்ததைப் போல தொடர்ந்து வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளனர். இவர்களது கோரிக்கையை இந்த அரசு பரிசீலித்து பகுதி இயந்திரத்தினாலும், பகுதி கையினாலும் செய்யப்படும் மெழுகு தீக்குச்சிகளுக்குட் முழு வரி விலக்கு அளிக்க முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு.மணி குடிசைத் தொழிலாகச் செய்யும் ரொட்டி மற்றும் பண்டங்களுக்கும் விற்பனை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். 17.7.96 முதல் ரொட்டிக்கு குறைந்த வரியாக 4 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. தற்போது 19.8.97ல் பேக்கரிகளில் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப் பொருட்கள் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் சிறு தொழில்களுக்கு சலுகை அளிக்கும் வகையில் ரூபாய்5 இலட்சம் மொத்த விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு விற்பனை

வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறெல்லாம் எவ்வளவோ சிரமத்திற்கு இடையே சிலரது கோரிக்கைகளை ஏற்று, சிலரது கோரிக்கைகளை ஏற்க முடியாமல் அதே நேரத்தில் சுலபமாக வரிகளை வசூலிக்கக்கூடிய வகையில், ஏழைகளுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லாமலும், ஏழைகளுக்கு - நடுத்தர மக்களுக்கு கூடுமான வரையில் வரிவிலக்கு அளித்தும், வரியைக் க்ுறைத்தும் அதே நேரத்தில் தாங்கக்கூடியவர்கள் மீது வரியை விதித்தும் இந்த அரசு தன்னுடைய வருமானத்தை வருவாயைப் பெருக்கிக் கொண்டு இருக்கிற அதே சூழ்நிலையில் - அன்றைக்குக் கூட சில உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்த வரி வசூலிப்பில் கண்டிப்பாக இருக்க வேண்டும்; இதிலே தீவிரமாக முயற்சிகள் வேண்டும்; திறமையாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னார்கள். நான் அன்றைக்குச் சொன்னதை மீண்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

## ஆயத்தீர்வை மீதான வரிவிதிப்பை எதிர்த்து வழக்கு

இந்தியாவில் தயாரிக்கப்படுகிற வெளிநாட்டு மதுவின் மீதான 1981லிருந்து, அந்த அதிபர்கள் 1989 ஆம் ஆண்டு முடிய செலுத்த வேண்டிய ஆயத் தீர்வை மீதான வரி 57.46 கோடி ரூபாய். அவர்கள்செலுத்த வேண்டிய ஆயத்தீர்வை மீதான விற்பனை வரிதான் இந்த 57 கோடி ரூபாய். இந்த வரியை வசூலிக்க 1989லேயே நடவடிக்கை எடுக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, அவர்கள் நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு

அரசுக்கு சாதகமாக அமைந்தது. எனவே அவர்கள் உச்சநீதி மன்றத்திற்குத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டிற்குச் சென்றார்கள். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றதே தவிர இடைக்கால தடையாணை விதிக்கப்படவில்லை. இடைக்காலத் தடையாணை இல்லையென்றால் அந்தவரியை வசூலித்து இருக்கலாம். வரி வசூலிக்கப் படவில்லை. இதற்கிடையிலே அவர்களுக்கு ஏதுவாக திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்டுவிட்டது. இப்போதும் அவர்களுக்கு ஏதுவாகத்தானே - இதையெல்லாம் செய்ய வேண்டுமென்ப தற்காகத்தானே தி.மு.க ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு ஏதுவாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அப்போது கலைக்கப்பட்டது. அப்படி கலைக்கப்பட்ட பிறகு கவர்னருடைய ஆட்சி வந்தது. அந்த கவர்னர் பீஷ்ம நாராயண் சிங், கவர்னராக இருந்தபோது இந்தக் கோப்பு அவர்களுக்கு வந்தவுடன் அவர்கள் சொன்னார்கள்.

தடையாணைதான் இல்லையே, வரியை வசூலிக்கலாமே என்று கருதிப் பார்க்காமல், இது குறித்து உச்சநீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது, ஆகவே வசூலிக்க வேண்டாமென்று அவர், அவருடைய கருத்தை அதிலே, அந்தக் கோப்பிலே பதிய வைத்திருக்கிறார். கவர்னர் ஆட்சிக்குப் பிறகு 1991ல் நடந்த தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலே ஆட்சி அமைந்தது. அந்த ஆட்சி அமைந்த பிறகு கவர்னர் இடத்திலே இருந்த அந்தக் கோப்பு சுற்றி நிதி அமைச்சருக்கு வந்தது. நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அந்தக்கோப்பிலே 31.7.91ல் கையெழுத்திடுகிறார். இப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்று அவர் ஒன்றும் கருத்துச் சொல்லவில்லை. அவர் ஒன்றும் கருத்துச் சொல்ல முடியாது. அவரெல்லாம் எப்படிக் கருத்துச் சொல்ல முடியும். நிதியமைச்சர்

கருத்துச் சொல்ல முடியுமா? நிதியமைச்சர் கோப்பிலே கையெழுத்து போடுகிறார். கையெழுத்து போட்டு முதலமைச்சருக்கு அனுப்புகிறார். 31.7.91ல் நாவலர் நெடுஞ்செழியன் நிதியமைச்சர் கையெழுத்து போட்டு முதலமைச்சருக்குக் கோப்பினை அனுப்பி வைக்கிறார்.

## ஒரு வருடம் 4 மாதம் கழித்து ஜெயலலிதா கையெழுத்து

முதலமைச்சர் அந்தக் கோப்பினைப் பார்த்துவிட்டு, ஒரு வருடம் நான்கு மாதங்கள், பத்தொன்பது நாட்கள் கழித்து அதிலே கையெழுத்து இடுகிறார். என்ன கையெழுத்து, இவ்வளவு நாட்கள் ஏன் தாமதம், உடனே வசூல் செய் என்றா? இல்லை. வெறும் கையெழுத்து. நிதியமைச்சர் என்ன கையெழுத்து இட்டாரோ, அதே கையெழுத்தை அவரும் இட்டார். எதற்கு நிதியமைச்சர் கையெழுத்து இட்டிருக்கிறார்? இப்போது வசூலிக்க வேண்டாம், வழக்கு முடியட்டும் என்று எழுதியிருக்கிறாரே கவர்னர், அதை ஏற்றுக் கொண்டுதான் நிதியமைச்சர் கையெழுத்து இட்டிருப்பதாகப் பொருள். அதையே திரும்பவும் முதலமைச்சரும் ஏற்றுக்கொண்டு, அவரும் கையெழுத்திடுகிறார். எனவே, அது வசூலிக்கப்படவேயில்லை. நம்முடைய ஆட்சி 1996 ஆம் ஆண்டு வந்தவுடன், அந்தக் கோப்பை எங்கெங்கோ சுற்றி, தேடிப்பார்த்து, கடைசியாக அதைப் பார்த்தபோது, இந்த வரியை வசூலிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டது. அவ்வாறு வசூலிக்கச் சொல்லி உத்தரவிடப்பட்டதும் இந்த 57 கோடி ரூபாயைச் செலுத்த வேண்டியவர்கள் நம்மைச் சந்தித்து, தவணை முறையில் கட்டுகிறோம் என்றோ, அல்லது இரண்டு ஆண்டுக்காலம் தவணை கொடுங்கள் என்றோ யாரும் கேட்கவில்லை.

## தடையாணை நீக்கிட
## உயர்நீதிமன்றம் செல்ல உத்தரவு

இதற்கிடையிலே உச்சநீதிமன்றத்தினுடைய ஆணையும் வந்து விட்டது. அந்த வரியைக்கட்டத்தான் வேண்டுமென்று உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வந்துவிட்டது. இதில் நாம் கவனமாகப் பார்க்க வேண்டும். உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் வந்துவிட்டது. உடனடியாகக் கட்ட வேண்டுமென்று அவர்களுக்கு நோட்டீஸ் போனதும், சிட்டி சிவில் கோர்ட்டுக்குப்போய் ஸ்டே வாங்கிவிட்டார்கள். உச்சநீதிமன்றத்தினுடைய ஆணைக்கு சிட்டி சிவில் கோர்ட்டிலே ஸ்டே கொடுக்கப்பட்டது. வழக்கினை நடத்துங்கள்; தீவிரமாக நடத்துங்கள் என்று சொன்னேன். வழக்கும் நடத்தப்பட்டது. அதில், 30 ஆம் தேதியன்று தீர்ப்பு. தீர்ப்பு வரும் என்று எதிர்பார்த்து, உட்கார்ந்திருந்தால் நீதிபதிசொல்லிவிட்டார். "மறுபடியும் மறு ஆய்வு செய்யப்போகிறேன்; மறுவிசாரணை நடத்தப் போகிறேன்" என்று சொல்லி விட்டார். சிட்டி சிவில் கோர்ட்டு நீதிபதி மறு விசாரணை நடத்தப் போகிறேன் என்று 'கம்ப்ளீட்'டாக எல்லாவற்றையும் 'ரீ-ஓப்பன்' பண்ணப் போகிறேன் என்று சொல்லி, மீண்டும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன். தடையாணையை நீக்கி அந்தத் தொகையை விரைவிலே வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் துறைக்கு ஆணையிட்டதோடு, சிட்டி சிவில் கோர்ட்டினுடைய தடையாணையை நீக்கிட உயர்நீதிமன்றத்திற்குச் செல்லுமாறு ஆணையிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி ஒரு நிலைமை. யாரும் எதையும் செய்தாக முடிகிறது இன்றைக்கு நாட்டில். நான் எந்தத் துறையையும் குறை கூறவில்லை.

ஆனால், இந்த 57 கோடி ரூபாய் அரசுக்கு வந்து சேர்ந்தால், எத்தனை நல்ல காரியங்களை எத்தனை எளியவர்களுக்கான திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச்சொல்கிறேன்.

## மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அலுவலகங்களுக்கு கட்டடங்கள்

இதற்கடுத்து, மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி யாரும் அதிகம் பேசவில்லை. காரணம், மாவட்டம் மிகவும் நன்றாக இருக்கும்போது எதற்காகப் பேச வேண்டும் என்று, பேசாமல் விட்டுவிட்டீர்கள் என்றே கருதுகிறேன். மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், இப்போது மிக முக்கியமாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதுதான் இருக்கின்றது. ஏற்கெனவே இருந்த அரசால், நான்கைந்து புதிய மாவட்டங்கள் அன்றைக்கு உருவாக்கப் பட்டது என்றாலும்கூட, அதிலே எந்த மாவட்டத்திலும் கட்டடங்கள் கட்டப்படவில்லை. தூத்துக்குடிக்கு கட்டடம் கட்டப்படவில்லை. திருவண்ணா மலையில் கட்டடம் கட்டுவதற்கு முயன்று, அதிலே ஒரு தகராறு ஏற்பட்டு நின்றுவிட்டது. விழுப்புரத்தில் நாம்தான் கட்டி முடித்திருக்கிறோம். இந்த மாதம் அதனுடைய திறப்பு விழா நடைபெற இருக்கிறது. நாமே அறிவித்து, நாமேதான் கட்டி முடித்திருக்கிறோம். மற்றும் நான்கு மாவட்டங்களில் இடங்கள் பார்க்கப்பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் கட்டடங்கள் கட்டப்பட இருக்கின்றன.

இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் புதிதாகப் பலபேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது உங்களுக்கு நன்றாகத் தெரியும். சிலபேர் மாற்றப்பட்டிருக்கிறார்கள். புதிதாக வந்தவர்கள்,

ஏற்கெனவே இருப்பவர் எல்லோரும், நம்முடைய அரசின் திட்டங்களை, இந்த நிதிநிலை அறிக்கையிலே நாம் சொல்லியிருக்கின்ற திட்டங்களை 'இம்ப்ளிமெண்ட்'. நடைமுறைப் படுத்துவதற்குத் தக்க அறிவுரைகளைப் பெறுவதற்கும், அவர்களுடைய கருத்துக்களை அரசு பெறுவதற்கும் ஏற்ற வகையில் ஜூன் மாத முதல் வாரத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு, போலீஸ் அதிகாரிகளுடைய மாநாடு நடைபெற இருக்கிறது. அந்த மாநாட்டில், நிதிநிலை அறிக்கையிலே **1996 - 97, 1997 - 98, 1998 - 99** இவைகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் எவையெவை எஞ்சியிருக்கின்றதோ, அவற்றை நிறைவேற்றவும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே போன்ற திட்டங்களை நிறைவேற்றவும், மக்களுடைய அடிப்படை வசதிகளையெல்லாம் செய்து கொடுப்பது இந்த அரசினுடைய முக்கியமான குறிக்கோள் என்ற அந்தக் குறிக்கோளை நோக்கிப் பயணம் நடத்தவும் அந்த மாநாடு பெரிதும் பயன்படும் என்று கருதுகின்றேன்.

- இவ்வாறு மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்களின் விவாதங்களுக்குப் பதில் அளித்து உரையாற்றினார்.

சமையல் எண்ணெய்களுக்கு
முழுமையான வரி விலக்கு!

வெண்ணெய், மசாலா
பொடிகளுக்கு வரி குறைப்பு

மாணவர்கள் பயன்படுத்தும்
நோட்டு புத்தகங்களுக்கு வரி விலக்கு

பாண்டேஜ் துணி உற்பத்தியில்
ரூ 25 இலட்சம் வரை வரி விலக்கு!

கணினி மின் பொருள்களுக்கு
வரி குறைப்பு